ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2339/08 - 2023 ජූලි මස 04 වැනි අඟහරුවාදා - 2023.07.04

*2339/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், வரையறுக்கப்பட்ட வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் தொடர்பில் 2016, யூலை 4 ஆந் திகதிய 1974/ 7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளை மூலம் திருத்தப்பட்டவாறானதும், அத்துடன் 2021, மே 24 ஆந் திகதிய 2229/ 2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுத்துப் பின்னரான கட்டளை மூலம் மேலும் திருத்தப்பட்டவாறானதுமான, 2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கட்டளைக்கு மேலதிகமாக, பின்வருமாறு இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன் :-

> 2016, யூலை 4 ஆந் திகதிய 1974/ 7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளை மூலம் திருத்தப்பட்டவாறானதும், அத்துடன் 2021, மே 24 ஆந் திகதிய 2229/ 2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளை மூலம் மேலும் திருத்தப்பட்டவாறானதுமான, 2012, ஒற்றோபர் 31 ஆந் திகதிய 1782/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகமானது, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை 2023, யூலை 01 ஆந் திகதியிலிருந்து பன்னிரண்டு (12) மாதங்களைக் கொண்ட மேலதிக காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கும் பொருட்டு, பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-
>
> "(4) மேற்கூறப்பட்ட, மேல் மாகாணத்தில் கொழும்பு 01, கோட்டையில் சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளடங்கலான கலப்பு பயன்பாட்டு கட்டிடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கும், கட்டியெழுப்புவதற்கும் மற்றும் தொழிற்படுத்துவதற்குமான கருத்திட்டம், திருத்தப்பட்டவாறான சொல்லப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின்கீழ் மூலேபாய அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக கலப்பு பயன்பாட்டு கருத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்தான காலப்பகுதியினுள், 2024, யூன் 30 ஆந் ஆந் திகதியில் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும்."

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூன் 30.*

EOG 07-0005

1A - PG 6378 — 291 (2023/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*